[7th August 1965

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) (i) The Government have requested Dr. P. S. Lokanathan, Director-General of the National Council of Applied Economic Research, New Delhi to undertake a review of the working of the Madras General Sales Tax Act, 1959 and he has agreed to do so.

(ii) The Government have also constituted a Sub-Committee of the State Sales Tax Advisory Committee, with the Commissioner for Commercial Taxes as Chairman, to consider the question of simplification of the procedure under the Madras General Sales Tax Act, 1959 and Central Sales Tax Act, 1956 and the rules framed thereunder.

திரு. வை. சங்கரன் : இந்தக் கமிட்டியும், டாக்டர் லோகநாதன் அப்பாயிண்ட் செய்யப்பட்டிருப்பதும் ப்ரொஸீஜரை மாத்திரம் சிம்ப்ளிஃபை செய்ய அப்பாயிண்ட் செய்யப்பட்டிருக்கிறார்களா? அல்லது, ரேட்சையும் கவனித்து அது சம்பந்தமாக யோசனை சொல்ல அப்பாயிண்ட் செய்யப்பட்டிருக்கிறார்களா? அல்லது ப்ரொஸீஜூரல் ப்ரொவிஷன்ஸை மாத்திரம் பார்த்து யோசனை . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டாக்டர் லோகநாதன் அவர்கள் ரேட்ஸ், ப்ரொஸீஜர் எல்லாவற்றையும் பற்றிச் சிபாரிசு செய்ய முடியும். சப்-கமிட்டி ப்ரொஸீஜர் பற்றி மாத்திரம் தான் சிபாரிசு செய்யும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தற்போது உள்ள ஒரு முனை விற்பனை வரிக்கு பதில் பல முனை வரி இருக்கவேண்டும் என்று ராஜ்யத்தில் ஒரு கருத்து இருக்கிறது. அதையும் இந்தக் குழு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதையும் பரிசீலனை செய்யும். ஆனால், இதைப்பற்றிக் கருத்து வேறுபாடு எப்போது பார்த்தாலும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

Widening the Bridge across Cheyyar

* 110 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to widen the bridge at Cheyyar on the Arni-Wandiwash Road, North Arcot district; and

(*b*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have recently sanctioned the work of widening the roadway over the head sluice of the Cheyyar Anicut in mile 25/8 of the Arni-Arcot-Wandiwash Road at a cost of Rs. 50,000.

(*b*) The work is in progress.

7th August 1965]

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்தத் திட்டம் எப்போது முடிவு அடையும் என்று அமைச்சர் கூறுவாரா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது 50,000 ரூபாய் வேலை. வேலை நடந்துகொண்டிருக்கிறது. துரிதமாக முடிவு அடையும்.

கடல் அரிப்புகளை தடுத்தல்

*111 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து
திரு. எம். மாயாண்டி நாடார்
திரு. வை. சங்கரன்
} கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு கடற்கரையில் எந்தெந்த இடங்கள் கடல் அரிப்புகளால் பாதிக்கப்படுகின்றன ?

(இ) அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : A paper[a] is placed on the Table of the House.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இதிலே திருச்செந்தூரில் கடலரிப்பால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எஸ்டிமேட் தயாராகியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலை எப்போது துவங்கப்படும் என்று கூறப்படவில்லை. எப்போது வேலைகள் மேற்கொள்ளப்படும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எஸ்ட்டிமேட் தயாராகியிருக்கிறது. சாங்ஷன் ஆனவுடன் வேலை எடுத்துக்கொள்வார்கள். அதற்கு மேல் இப்போது சொல்லுவதற்கில்லை.

திரு. வை. சங்கரன் : கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் 8 முதல் 11 வரை உள்ள ஐட்டெம்களில் தகவல் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திடீரென்று இராமேச்வரம் போல் இந்த அபாயம் எப்போதும் ஏற்பட்டுவிடுமாதலால் எமர்ஜென்ட்டாகக் கருதப்பட்டு இந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதெல்லாம் சாதாரணமாக இருக்கக்கூடிய கடலரிப்புக்குச் செய்யக் கூடிய காரியங்கள். திடீரென்று அபாயம் வரும்போது தனுஷ்கோடியைப்பற்றிச் சொல்லி இருப்பதைப் பார்த்தால் ஏற்படுத்தப்பட்ட தடுப்புகள் பயங்கரக் கடற் கொந்தளிப்பை எதிர்த்து நிற்க முடியவில்லை என்பது தெரியும். இதெல்லாம் வருஷா வருஷம் ஏற்படக்கூடியதைத் தடை செய்யத்தான். அதற்கான எஸ்டிமேட்டுகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கடல் அரிப்பைப் போலவே எங்கள் ஊரிலே ஆறுகள் கூட அரித்துக் கொண்டு வருகின்றன. என்னுடைய தொகுதியில் வயலாத்தூரில்

[a] Printed as Appendix II on pages 432–434.